**சுருக்கம்**

மானியக் கோரிக்கை –2007-08-மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிவிப்பு – நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாவது மற்றும் +2 படிக்கும் மாணவ மாணவிகளில் 2007–08 ஆம் ஆண்டில் மாநில அளவில் இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பட்டப்படிப்புக்கு உதவித் தொகை வழங்குவது குறித்து – ஆணைகள் வெளியிடப்பட்டது – திட்டத்தை செயல்படுத்த குழு அமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**அரசு ஆணை (நிலை) எண்.80** **நாள் :16.05.2008**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நந4) துறை

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை)எண்.55 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.3.2008

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.2493/2008/எம்.3, நாள் 21.4.08

**ஆணை : –**

2007–08 ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் விடுத்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாநில அளவில், பத்து மற்றும், +2 இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் , மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும், மற்றும் , அவர்களுள் பொருளாதார காரணங்களால் பட்டப்படிப்பை தொடர இயலாத மாணவ / மாணவியருக்கு அரசு கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம், உணவுக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே உதவித் தொகையாக நிர்ணயம் செய்ய

வேண்டும். மற்றும் அவ்வாறு உதவித்தொகை பெறும் மாணவ / மாணவியர் ஏதாவது ஒரு உதவித் தொகை (Scholarship) மட்டும் தான் பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, உதவித் தொகை வழங்கவும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2) மேலும், மேற்குறிப்பிட்ட அரசாணையில் இத்திட்டத்தினை செயல்படுத்த "பொது நிதி" (Corpus Fund) ஒன்றினை உருவாக்கிட, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூ.2.53 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்யவும், அரசு இணை மானியமாக ரூ.2.00 கோடி கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈட்டு நிதியிலிருந்து வழங்கவும், மேலும் இத்திட்டத்தினை உடனடியாக செயல்படுத்த வேண்டி உள்ளதால், பிப்ரவரி 2008–ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து பிரித்து வழங்கப்படும் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.2.53 கோடியினை பிடித்தம் செய்து மேற்படி பொது நிதிக்கு (Corpus Fund) உடனே மாற்றம் செய்திடவும் பின்னர் இத்தொகையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானத்தைப் பெற்று உள்ளாட்சி நகர்ப்புற அமைப்புகளின் கல்வி நிதியிலிருந்து பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3) மேற்கண்ட அரசு ஆணைகளின்படி பிப்ரவரி 2008–ல் பிரித்து வழங்கப்பட்ட மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து ரூ.2.53 கோடி பிடித்தம் செய்யப்பட்டது. அரசு ஆணைகளின்படி இந்தத் தொகை அரசு நிறுவனங்கள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக நீண்ட கால வைப்பில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு கல்வி உதவித் தொகை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அரசு ஆணைகளின்படி இந்த நிதியினை பராமரிப்பதற்கு டுபிட்கோ, டுஃபிசெல், பவர் பைனான்ஸ் மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஆகிய அரசு நிதி நிறுவனங்களை தொடர்பு கொள்ளப்பட்டது என்றும், இதில் அரசு நிதி நிறுவனங்களான டுபிட்கோ (தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்) மற்றும் டுஃபிசெல் (தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்) இந்நிதியினை பராமரிப்பதற்கு தங்கள் இசைவினை தெரிவித்து கடிதங்கள் அனுப்பியுள்ளன என்றும், இவ்விரண்டு அரசு நிதி நிறுவனங்களில், டுஃபிசெல் நிறுவனம் சேவைக் கட்டணமாக 1 % வருடத்திற்கு கோரி உள்ளது என்றும், அத்துடன் தணிக்கைக்குரிய கட்டணத்தினை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது என்றும், ஆனால் டுபிட்கோ நிறுவனம் இந்த நிதியினை பராமரிக்க கட்டணம் எதுவும் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளது என்றும், மேலும் தணிக்கை கட்டணம் ஏதும் இருப்பதாகத் தெரிவிக்கவில்லை என்றும், எனவே டுபிட்கோ நிறுவனத்தில் இந்நிதியினை பராமரிப்பதில் பல்வேறு அனுகூலங்கள் உள்ளதால் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து பிடித்தம் செய்த ரூ.2.53 கோடிக்கான காசோலை டுபிட்கோ நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டதாக நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4) மேலும் , இத்திட்டத்தினை செயல்படுத்த கீழ்க்கண்டவாறு குழு ஒன்றினை அமைத்துத் தருமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | தலைவர் |
| 2 | அரசுச் செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | : | உறுப்பினர் |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையர் | : | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |
| 4 | நகர்மன்றத் தலைவர்களின் தலைவர் | : | உறுப்பினர் |
| 5 | மாநகராட்சி மேயர் (மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருமான அடிப்படையில் சுழற்சி முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை) | : | உறுப்பினர் |
| 6. | அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை அவர்களின் பிரதிநிதி | : | உறுப்பினர் |

5) மேலும் மேற்குறிப்பிட்ட குழுவின் பணிகள் கீழ்க்கண்டவாறு அமையும் என்றும் அது குறித்தும் அரசாணைகள் வெளியிடுமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்: -

அ) மாநில அளவில் பத்தாவது மற்றும் +2 இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாநகராட்சி/நகராட்சி பள்ளிகளில் பயிலும் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) முதல் 25 மாணவ/மாணவியர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் பரிசுத் தொகை ரூ.10,000/– மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கிட பரிந்துரை செய்தல்

ஆ) இந்த 25 மாணவ/மாணவியர்களில், பொருளாதார காரணங்களால் பட்டப்படிப்பை தொடர இயலாத மாணவ/மாணவியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் பட்டப்படிப்பை தொடர, அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டவாறு கல்வி உதவித் தொகையினை வழங்கிட பரிந்துரை செய்தல்;

இ) கல்வி உதவித் தொகை மற்றும் பரிசுகள் வழங்கிட உருவாக்கப்பட்டுள்ள பொது நிதியினை டுபிட்கோ நிறுவனத்தில் பராமரிக்கப்படுவதை கண்காணித்தல்;

ஈ) டுபிட்கோ நிறுவனம் இந்நிதியினை பராமரிப்பதற்கும், வழங்கும் வட்டி தொகைக்கும், சமர்ப்பிக்கும் கணக்குகள் மற்றும் ஆவணங்களை சரிபார்ப்பது மற்றும் அதிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவுகளுக்கு முறையான கணக்குகள் பராமரிக்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பது ;

உ) மேலும் வைப்பீடு செய்யப்படும் தொகையிலிருந்து அதிக வட்டி பெறுமாறு முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்காணிப்பது;

ஊ) இந்நிதி குறித்து டுபிட்கோ நிறுவன தணிக்கையாளரின் வருடாந்திர தணிக்கை அறிக்கையினை பார்வையிட்டு ஒப்புதல் வழங்குதல் ;

எ) முக்கியமானதாக கருதப்படும் பிற பணிகள் ஏதேனும் ;

ஏ) இக்குழு குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு முறை கூட்டப்படும்.

6) நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாவது மற்றும் +2 படிக்கும் மாணவ மாணவிகளில் மாநில அளவில் முதல் 25 இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பரிசுத் தொகை மற்றும் அவர்களுள் பொருளாதாரக் காரணங்களால் உயர்படிப்பு தொடர முடியாத மாணவ/மாணவியர்களுக்கு பட்டப்படிப்பு உதவித் தொகை வழங்க தொடங்கப்பட்டுள்ள திட்டத்தினை செயல்படுத்த மேலே பத்தி-4-ல் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்தும், இக்குழுவின் பணிகள், மேலே பத்தி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும் என தெரிவித்தும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
உள்ளாட்சி நிதி கணக்கு தணிக்கை, சென்னை.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ , சென்னை-35
அனைத்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர்கள்,
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய் வுத் துறைத் தலைவர்
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009.

நகல்

முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
செயலரின் நேர்முக உதவியாளர், பள்ளி கல்வித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 600 009.
நிதித் துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(வ/செ) துறை, சென்னை 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 16/5/08